செ.வெ.எண்:38/மார்ச் நாள்:22.03.2021

**தேர்தல் பறக்கும்படை, நிலையான கண்காணிப்புக் குழுவினர் வாகனங்களில் ஜிபிஎஸ் கருவி பொருத்தி கண்காணிக்கும் பணியை பொது பார்வையாளர்கள் திரு.ஆர்.கே. தினேஷ் சிங் இ.ஆ.ப, திரு. கமால் ஜஹான் லக்ரா இ.ஆ.ப, திரு.பங்கஜ் இ.ஆ.ப., ஆகியோர் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.**

தருமபுரி மாவட்ட ஆட்சியர் அலுவலக முதல் தளத்தில் மாவட்ட தேர்தல் கட்டுப்பாட்டு அறை அமைக்கப்பட்டுள்ளது. இங்கு தேர்தல் சம்பந்தமான புகார்களை கண்காணிக்க 24 மணி நேரமும் அலுவலர்கள் தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றனர்.

மேலும், தருமபுரி மாவட்டத்தில் பறக்கும்படை, நிலையான கண்காணிப்பு குழுக்கள், வீடியோ கண்காணிப்பு குழுக்கள் ஆகியவை அமைக்கப்பட்டு தேர்தல் நடத்தை விதிமுறைகள் கண்காணிக்கப்பட்டு வருகின்றன.

இதன்படி மாவட்டத்தில் உள்ள ஒவ்வொரு சட்டப்பேரவை தொகுதிக்கும் பறக்கும் படை மற்றும் நிலையான குழுக்கள், மற்றும் வீடியோ கண்காணிப்பு குழுக்கள் என மொத்தம் 95 குழுக்கள் அமைக்கப்பட்டு 24 மணி நேரமும் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதனிடையே பறக்கும் படை மற்றும் நிலையான கண்காணிப்பு படை வாகனங்களில் ஜிபிஎஸ் கருவி பொருத்தப்பட்ட வாகனம் எந்த இடத்தில் செல்கிறது என்பதை தேர்தல் கட்டுப்பாட்டு அறையில் இருந்து கணினியின் உதவியுடன் கண்காணிக்கவும் வாகனத்தின் வேகத்தை கண்காணிக்கவும் வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

இந்தப் பணியினை தருமபுரி மாவட்ட 5 சட்டமன்ற தொகுதிகளுக்கு நியமிக்கப்பட்டுள்ள தேர்தல் பொது பார்வையாளர்கள் திரு.ஆர்.கே. தினேஷ் சிங் இ.ஆ.ப ,திரு. கமால் ஜஹான் லக்ரா இ.ஆ.ப, திரு.பங்கஜ் இ.ஆ.ப ஆகியோர் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

மேலும் சிவிஜில் செயலியில் பணப்பட்டுவாடா, பரிசு விநியோகம், மதுபான விநியோகம் உள்ளிட்ட பல்வேறு விதிமீறல்கள் குறித்து வரப்பெற்ற புகார்கள் குறித்தும் ஆய்வு செய்தனர்.

இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எஸ்.பி.கார்த்திகா, இ.ஆ.ப., மாவட்ட வருவாய் அலுவலர் திரு.க.இராமமூர்த்தி,செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.மு.பாரதிதாசன் , தேசிய தகவல் மைய அலுவலர் திரு.ரகுபதி உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) திரு.சீனிவசசேகர், உதவி இயக்குநர் பேரூராட்சி திரு.கண்ணன் வட்டாட்சியர் திருமதி.ரேவதி (அரசு கேபிள் டிவி) ஆகியோர் உட்பட பலர் உள்ளனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தருமபுரி.**